Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், பிப்ரவரி 05, 2025 | இதழ் 298

## பெல்ஜியம் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள திரு. பார்ட் டி வெவருக்குப் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

சென்னை, 05 பிப்ரவரி 2025: பெல்ஜியம் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள திரு பார்ட் டி வெவருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியா-பெல்ஜியம் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், உலகளாவிய விவகாரங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும்




இணைந்து பணியாற்றுவோம் என்று திரு மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளப்பதிவில் பிரதமர் கூறியிருப்பதாவது:

"பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள பார்ட் டி வெவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். இந்தியா-பெல்ஜியம் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், உலகளாவிய விவகாரங்களில் நமது ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன். உங்கள் பதவிக்காலம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்கள்."

## திரு கர்சன்பாய் சோலங்கி மறைவுக்கு பிரதமர் இரங்கல்

சென்னை, 05 பிப்ரவரி 2025: குஜராத் சட்டமன்ற உறுப்பினர் திரு கர்சன்பாய் சோலங்கி மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரங்கல் தெரிவித்துள்ளார். சமூக ஊடக எக்ஸ் தளத்தில் திரு மோடி பதிவிட்டுள்ளதாவது:

" குஜராத் சட்டமன்ற உறுப்பினர் திரு கர்சன்பாய் சோலங்கியின் மறைவுச் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரது எளிமையான வாழ்க்கைக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்காகவும் அவர் என்றென்றும் நினைவுகூரப்படுவார்.

மறைந்த சோலங்கியின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அதேவேளையில், துயரத்தில் இருக்கும் அவனது குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்...! ஓம் சாந்தி...!!"

## ஐசிஏஆர் -மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்டபம் மண்டல மையத்தில் 78-வது நிறுவன தின கொண்டாட்டம்

சென்னை, 05 பிப்ரவரி 2025: ஐசிஏஆர் - மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் 78-வது நிறுவன தினம் பிப்ரவரி 3-ம் தேதி, மண்டபம் மண்டல மையத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வை, மையத்தின் தலைவர் முதன்மை விஞ்ஞானி டாக்டர் வினோத் முன்னிலையில், மண்டபம், பிரதமரின் ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா முதன்மை பொறுப்பாளர் திரு. ஆர். ஜான், மரைக்காயர்பட்டினம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு ரவிச்சந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் மாணவர்கள்



மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

"ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 1950-க்கும் மேற்பட்ட மாணவர்களும், ஏராளமான பொதுமக்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அவர்கள் கடல் மீன்வளம், கடல் பல்லுயிர் அருங்காட்சியகம், மீன் குஞ்சு பொரிக்கும் இடம், கடற்பாசி தாவர உற்பத்தி பிரிவு, தேசிய கடல் மீன் வளர்ப்பு வங்கி ஆகியவற்றைப் பார்வையிட்டனர். மையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளின் காட்சிப்படுத்தலையும் அவர்கள் பார்வையிட்டனர். மண்டபம் மண்டல மையத்தின் விஞ்ஞானிகள் மற்றும் ஊழியர்கள், நடந்து வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் முக்கிய சாதனைகள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கினர். கடல் பல்லுயிர் பாதுகாப்பு, தொழில் வழிகாட்டுதல் குறித்து 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மாணவர்-விஞ்ஞானிகளின் தொடர்பு கூட்டம் நடத்தப்பட்டது. 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது. இந்த தொடர்பு திட்டத்தின் மூலம் மொத்தம் 250 மாணவர்கள் பயனடைந்தனர்.




## சென்னையில் நடைபெறும் வடகிழக்குப் பிராந்திய கண்காட்சிக்கான முன்னோட்ட நிகழ்வு

சென்னை, 05 பிப்ரவரி 2025: வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம், 2025 பிப்ரவரி 5, அன்று சென்னை கிண்டியில் உள்ள ஹோட்டல் ஹில்டனில் பிற்பகல் 3:30 மணிக்கு வடகிழக்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டு கண்காட்சியை நடத்துகிறது. இதை வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சர் திரு ஜோதிராதித்ய எம். சிந்தியா தொடங்கி வைக்கிறார். இந்த அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சல் குமார், இணைச் செயலாளர் திரு சாந்தனு உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள், பல்வேறு வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த உயர் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள். இந்தக் கண்காட்சியில் வர்த்தகர்கள்,

அரசு பிரதிநிதிகள் இடையேயான கூட்டங்கள் இடம்பெறும். இது சாத்தியமான முதலீட்டாளர்கள் மாநில பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவும் வடகிழக்குப் பிராந்தியத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளை ஆராயவும் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. இந்த நிகழ்வு வடகிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த மாநில அரசுகள், ஃபிக்கி, இன்வெஸ்ட் இந்தியா (முதலீட்டுக்கு வழிவகுக்கும் கூட்டாளர்) ஆகியவை ஒருங்கிணைந்து இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய எட்டு வடகிழக்கு மாநிலங்களின் காட்சிப்படுத்தலை எடுத்துரைக்கும் வகையில் வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள முதலீட்டு கண்காட்சி தொடரின் 8-வது நிகழ்வாக சென்னை கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த மாநிலங்கள் வேளாண்மை, உணவு பதனப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்ப சேவைகள், பொழுதுபோக்கு, விளையாட்டு, எரிசக்தி, உள்கட்டமைப்பு, தளவாடங்கள், சுற்றுலா, விருந்தோம்பல், கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம், ஜவுளி, கைத்தறி, கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் பல்வேறு வகையான முதலீட்டு வாய்ப்புகளை எடுத்துக்காட்டும்.

## ரூ.30.29 கோடியில் 147 அவசரகால ஊர்திகளின் சேவை: ஸ்டாலின் துவக்கினார் - இளநிலை பகுப்பாய்வாளர்கள் 31 பேருக்கு பணிநியமன ஆணை

சென்னை, 05 பிப்ரவரி 2025: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் ரூ.30.29 கோடி மதிப்பில் 147 அவசரகால ஊர்திகளின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



மேலும் இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

72 புதிய "108" அவசரகால ஊர்திகள், மலை மற்றும் நிலப்பரப்பு பகுதிகளுக்கான 4 புதிய நான்கு சக்கர அவசரகால ஊர்திகள், 31 புதிய இலவச அமரர் ஊர்திகள் மற்றும் 36 புதிய இலவச தாய்சேய் நல ஊர்திகள் என மொத்தம் 29 கோடியே 15 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய்செலவில் 143 ஊர்திகளின் சேவைகள் இவை.

இதேபோல, தமிழக கேபிள் டிவி கம்யூனிகேஷன் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் 1 கோடியே 12 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய 4 புதிய அவசர கால ஊர்திகளின் சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், உணவு பாதுகாப்புத் துறையில் இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

மருத்துவ அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை இலகுவாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் பெற்று பயன்பெறும் வகையில் தற்போது 1,353 எண்ணிக்கையிலான '108' அவசரகால ஊர்திகள் செயல்படுத்தப் படுகின்றன.

இவற்றில் 981 அடிப்படை வசதி கொண்ட அவசரகால ஊர்திகள், 303 மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்திகள், 65 பச்சிளங்குழந்தைகளுக்கான ஊர்திகள், 4 முக்கிய பிரமுகர்களுக்கான ஊர்திகளும் அடங்கும்.

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதிக்கும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இலவச அமரர் ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இச்சேவை '155377' என்ற தொலைபேசியின் மூலம் இலவசமாக 24 மணி நேரமும் வழங்கப்படுகிறது.

இச்சேவையின் மூலம் விபத்து, இயற்கை பேரிடர் மற்றும் பேரழிவு காலங்களில் இறந்தோரது உடல்கள் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதோடு, அதன் பின்னர் அவர்களின் இல்லத்திற்கும் கொண்டு சேர்க்கப்படுகிறது.

சொந்த ஊர்களுக்கு கொண்டு போன

5 லட்சத்து 90 ஆயிரம் உடல்கள்

இச்சேவை மூலம் 7.5.2021 முதல் ஜனவரி 2025 வரை 5,89,375 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 195 ஊர்திகள் இச்சேவையின் கீழ் இயக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் - பாளையம்கோட்டை ஆகிய ஆறு இடங்களில் உணவு பகுப்பாய்வு கூடங்கள் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு உணவு பகுப்பாய்வகத்திலும் ஓர் ஆண்டிற்கு சுமார் 6000 உணவு மாதிரிகள், என ஆறு உணவு பகுப்பாய்வு கூடங்களில் மொத்தம் 36,000 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

இப்பணிகளை செம்மையாகவும், துரிதமாகவும் மேற்கொள்ளும் வகையில், உணவு பாதுகாப்புத் துறையில் உணவு பகுப்பாய்வு கூடங்களில் காலியாகவுள்ள இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு நடத்தப்பட்டு, 31 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் க.பொன்முடி, தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர்.லால்வேனா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழக கேபிள் டிவி கம்யூனிகேஷன் நிறுவனத்தின் இயக்குநர் சு. வெள்ளைசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டால்மியா பாரத் அறக்கட்டளை அரியலூர் மற்றும் டால்மியாபுரத்தில் டிக்ஷா பயிற்சியாளர்களுக்கான பாராட்டு விழாக்களை நடத்துகிறது.



திருச்சி, 05 பிப்ரவரி 2025: டால்மியா பாரத் லிமிடெட் (டிபிஎல்) இன்சிஷிஸி பிரிவான டால்மியா பாரத் அறக்கட்டளை (டிபிஎஃப்), அரியலூர் மற்றும் டால்மியாபுரத்தில் உள்ள டிக்ஷா (டால்மியா இன்ஸ்டிடியூட் ஆஃப் நாலெட்ஜ் அண்ட் ஸ்கில்ஹார்னெசிங்) மையங்களில் பாராட்டு விழாக்களை ஏற்பாடு செய்துள்ளது. திறமை மேம்பாட்டை வெற்றிகரமாக முடித்த 50 பயிற்சியாளர்கள் திட்டங்கள். அரியலூரில், மூன்று மாத உதவி எலக்ட்ரீசியன் படிப்பில், 25 பேர் தேர்ச்சி பெற்றனர், அதே நேரத்தில், டால்மியாபுரத்தில், 25 பயிற்சியாளர்கள் வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (சிஆர்எம்) படிப்பை முடித்தனர். திட்டத்தின் தாக்கத்திற்கு ஒரு சான்றாக, அனைத்து பட்டதாரிகளும் உள்ளூர் தொழில்களில் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர், மாதத்திற்கு ரூ.10,000 முதல் ரூ.30,000 வரை சம்பளம் பெறுகிறார்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு அந்தந்த மையங்களில் நடந்த சிறப்பு விழாவில் சான்றிதழ்கள் மற்றும் சலுகை கடிதங்கள் வழங்கப்பட்டன. குறிப்பிடத்தக்க வகையில், இந்த திட்டம் டிபிஎஃப் இன் கரூர் வைஸ்யா வங்கியுடன் (கேவிபி) கூட்டுறவின் கீழ் உள்ளது, இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (எம்ஓயு) மூலம் நிறுவப்பட்டது. இந்த ஒத்துழைப்பின் மூலம், டிபிஎஃப் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா முழுவதும் உள்ள 400 கிராமப்புற இளைஞர்களை மேம்பட்ட வேலைவாய்ப்பு திறன்களுடன் சித்தப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது நிலையான வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வழிவகுக்கிறது.

இந்நிகழ்ச்சியில், டிசிபிஎல் - டால்மியாபுரம், நிர்வாக இயக்குநர் மற்றும் பிரிவுத் தலைவர் திரு.விநாயகமூர்த்தி மற்றும் டிசிபிஎல் - அரியலூர் பிரிவுத் தலைவர் திரு. பிரியா ரஞ்சன் ஆகியோர் அந்தந்த இடங்களில் கலந்து கொண்டனர். திரு.வெங்கடேசன் மற்றும் திரு.காளிமுத்து, சிஎஸ்ஆர் அதிகாரி, கேவிபி, திரு.அஸ்வின் குமார், டிபிஎஃப், மற்றும் திரு.ரமேஷ்பாபு, ஜிஎம் & அட்மின் ஹெட், டிபிஎல் ஆகிய இரு இடங்களிலும் கலந்து கொண்டனர்.

விழாவில், டிசிபிஎல் - டால்மியாபுரத்தின் நிர்வாக இயக்குநரும், பிரிவுத் தலைவருமான திரு விநாயகமூர்த்தி பேசுகையில், "இன்றைய வேகமாக வளர்ந்து வரும் வேலை சந்தையில், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு திறன்மேம்பாடு முக்கியமானது. எங்கள் டிக்ஷா படிப்புகள் இளைஞர்களை அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை அணுகுவதற்குத் தேவையான நிபுணத்துவத்துடன் சித்தப்படுத்துகின்றன, இது அவர்களின் சமூகங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும்.

எங்கள் பயிற்சியாளர்களின் சாதனைகளில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம். கரூர் வைஸ்யா வங்கியின் இந்த முயற்சி வெற்றியடைய உறுதுணையாக இருந்ததற்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

டால்மியா பாரத் அறக்கட்டளை தலைமையிலான - டிக்ஷா என்பது இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வேலைவாய்ப்பு-இணைக்கப்பட்ட, குறுகிய காலதிறன் பயிற்சியாகும், இது அவர்கள் திறமையான பணியாளர்களில் சேரவும் மேம்பட்ட வருமானத்தை ஈட்டவும் உதவுகிறது. இந்தத் திட்டம் தற்போது இந்தியா முழுவதும் 20 மையங்களைச் செயல்படுத்துகிறது, சுகாதாரம், தொழில்துறை தையல் இயந்திர செயல்பாடு, தரவுநுழைவு மற்றும் சோலார் பிவி நிறுவல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கிறது. இன்று வரை, 16,000 க்கும் மேற்பட்ட நபர்கள் டிக்ஷா மூலம் பயிற்சி பெற்றுள்ளனர், 75% பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் அல்லது தங்கள் தொழிலைத் தொடங்குகிறார்கள். முக்கியமாக, பயிற்சி பெறுபவர்களில் 50% க்கும் அதிகமானோர் பெண்கள், பெண் அதிகாரம் மற்றும் பாலின சமத்துவத்திற்கான டிக்ஷா இன் வலுவான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக்

# நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் தலைமைக் கழகம் அறிவிப்பு



சென்னை, 05 பிப்ரவரி 2025: ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து வருகிற பிப்ரவரி 8, சனிக்கிழமை, மாலை தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கழக மாவட்டங்களின் சார்பில் "கண்டன பொதுக்கூட்டம்" நடைபெறும்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# தி.மு.க மாணவர் அணி சார்பில், கழகத் தலைவர் ஆணையேற்று, டெல்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!




சென்னை, 05 பிப்ரவரி 2025: ஒன்றிய பா.ஜ.க. அரசின் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் - 2025 திரும்பப் பெற வலியுறுத்தி, கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, இளந்தலைவர் - மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, தலைநகர் டெல்லி, ஜந்தர் மந்தரில் கழக மாணவர் அணி சார்பில், வரும் 06.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துக் கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கழக மாணவர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் தங்களது துணை அமைப்பாளர்கள் மற்றும் மாணவர் அணியினருடன் பெருமளவில் பங்கேற்று ஆர்பாட்டத்தை வெற்றியடைச் செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களின் கல்வி உரிமை; தமிழ்நாட்டின் மாநில உரிமையை காத்திட நாம் அனைவரும் அணி திரள்வோம்!

யு.ஜி.சி.யின் அதிகார அத்துமீறலை முறியடிப்போம்!!

"அண்ணா அறிவாலயம்", சென்னை-18. நாள்: 03-02-2025. சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. செயலாளர், தி.மு.க. மாணவர் அணி

# வியாசர்பாடி பகுதியில் கத்தியைக்காட்டி மிரட்டி ஒரு நபரிடம் பணம் பறித்துச்சென்ற நபர் கைது.

சென்னை, 05 பிப்ரவரி 2025: சென்னை, வியாசர்பாடி, இ.எச்.ரோடு, எண்.325/1 என்ற முகவரியில் வசித்து வரும் மதன்குமார், வ/44, த/பெ.முனுசாமி என்பவர் கூலி வேலை செய்து வருகிறார். கடந்த 01.02.2025 அன்று காலை வேலை முடித்து வியாசர்பாடி, மெகஷின்புரம் டாஸ்மாக் கடை அருகே வந்த போது, அங்கு நின்றுகொண்டிருந்த அறிமுகமான மாரி என்பவர் மதன்குமாரிடம் பணம் கேட்டுள்ளார். மதன்குமார் பணம் தர மறுக்கவே மாரி கத்தியைக்காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ.430/- பறித்துச் சென்றுள்ளார். இது குறித்து மதன் குமார் பி-3 வியாசர்பாடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-3 வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட மாரி, வ/46, த/பெ. மாணிக்கம், நேரு நகர், 3 வது தெரு, வியாசர்பாடி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட மாரி மீது ஏற்கனவே 4 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது

கைது செய்யப்பட்ட எதிரி மாரி விசாரணைக்குப் பின்னர் 01.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# மதுரவாயல் பகுதியில் உள்ள அடகு கடையில் போலியான தங்க மோதிரத்தை அடகு வைக்க முயன்ற வடமாநில நபர் கைது.



சென்னை, 05 பிப்ரவரி 2025: சென்னை, சென்னை, மதுரவாயல் ஏரிக்கரை, கன்னியம்மன் நகர் மெயின் ரோட்டில் வசித்து வரும் பர்வின் குமாவத், வ/32, த/பெ.தாவாரம் என்பவர் அவரது வீட்டு வளாகத்தில் கிருஷ்ணா அடகு கடை என்ற பெயரில் தங்க நகைகள் அடகு வைக்கும் கடை நடத்தி வருகிறார். பர்வின் குமாவத் 02.02.2025 அன்று காலை மேற்படி அடகு கடையில் இருந்தபோது, வடமாநிலத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சுமார் 6.300 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றை அடகு வைக்குமாறு கேட்டபோது, பர்வின் குமாவத் அந்த மோதிரத்தை சோதனை செய்து பார்த்தபோது, அது போலி தங்க மோதிரம் என தெரியவந்தது. உடனே பர்வின் குமாவத் தனது நண்பர்கள் உதவியுடன் போலி தங்க மோதிரத்தை அடகு வைக்க வந்த நபரை பிடித்து தி-4 மதுரவாயல் காவல் நிலையத்தில் ஒப்படைத்து, புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தி-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர் ஆதில் உசேன், வ/40, த/பெ.அர்சத் உசேன், நவாப் சிராஜீல் இஸ்லாம் லைன், பார்க் தெரு, கல்கத்தா, மேற்கு வங்கம் மாநிலம் என்பதும், இவர் தங்க முலாம் பூசிய போலியான தங்க மோதிரத்தை புகார்தாரரின் கடையில் அடகு வைத்து பணம் பெற்று மோசடி செய்ய முயன்றதும் தெரியவந்தது.

அதன்பேரில், தி-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, எதிரி ஆதில் உசேன் கைது செய்யப்பட்டார், அவரிடமிருந்து சுமார் 6.300 கிராம் எடை கொண்ட போலி தங்க மோதிரம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி ஆதில் உசேன் விசாரணைக்குப் பின்னர் 02.02.2025 நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# திருப்பத்தூரில் அண்ணாவின் 56ம் ஆண்டு நினைவு தின விழா



சென்னை, 05 பிப்ரவரி 2025: திருப்பத்தூர் நகரில் அண்ணாவின் 56ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நகர செயலாளர் டி.டி. குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சருமான கே.சி.வீரமணி பங்கேற்று, அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஜோலார்பேட்டை நகர செயலாளர் சீனிவாசன் ,வேலூர் மண்டல ஐடி விங் தலைவர் நாகேந்திரன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் தம்பா கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்,

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# திரையுலக வரலாற்றில் முதன்முறையாக 75 இயக்குநர்கள் & முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து வெளியிட்ட 'அஸ்திரம்' பட டிரைலர். நடிகர் ஷாம் நடிக்கும் 'அஸ்திரம்' பட டிரைலர் வெளியானது.

சென்னை, 05 ஜனவரி 2025: பெஸ்ட் மூவிஸ் சார்பில் தன சண்முகமணி தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'அஸ்திரம்'. கிரைம் இன்வெஸ்டிகேஷன் திரில்லராக உருவாகியுள்ள இந்த படத்தில் நடிகர் ஷாம் கதாநாயகனாக நடிக்க, மாடலிங் துறையை சேர்ந்த நிரா கதாநாயகியாக நடிக்கிறார். இந்த படத்தை அறிமுக இயக்குனர் அரவிந்த் ராஜகோபால் இயக்குகிறார். இவர் கடந்த பத்து வருடங்களாக பல குறும்படங்களை இயக்கி நடித்த அனுபவம் பெற்றவர்.



'அஸ்திரம்' படத்தில் முக்கிய வேடங்களில் நிழல்கள் ரவி, ஜீவா ரவி, அருள் டி.சங்கர் மற்றும் அறிமுக நடிகர் ரஞ்சித் டிஎஸ்எம் உள்ளிட்ட பலர் நடித்திருக் கின்றனர்.

இதன் ணூரதை, திரைக்கதையை எழுதியுள்ளார் கதாசிரியர் ஜெகன். த்ரில்லர் பாணியில் இந்த படம் விறுவிறுப்பான துப்பறியும் படமாக உருவாகியுள்ளது.

இந்தநிலையில் தமிழ் சினிமாவில் சாதனைகள் பல செய்த சீனியர் இயக்குநர்கள் முதல் சமீப காலமாக சின்ன சின்ன படங்களில் கூட தங்களது முத்திரைகளை அழுத்தமாக பதித்து வரும் இளம் இயக்குநர்கள் வரை மொத்தம் 75 பேரும், தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்களான விஜய்சேதுபதி, விஷால், ஆர்யா, சரத்குமார், அருண்விஜய் மற்றும் யோகி பாபு என 6 பேரும் இன்று (ஜன-31) மாலை 6:04 மணிக்கு இந்த படத்தின் டிரைலரை ஒரே நேரத்தில் வெளியிட்டனர். சினிமா வரலாற்றிலேயே இப்படி இத்தனை பிரபலங்கள் ஒரு படத்தின் டிரைலரை ஒன்றிணைந்து வெளியிடுவது என்பது இதுவே முதன்முறை.

இந்த டிரைலர் வெளியீடு குறித்து 'அஸ்திரம்' பட இயக்குநர் அரவிந்த் ராஜகோபால் கூறும்போது, "'அஸ்திரம்' படத்தை வெகு ஜன மக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு புதிய முயற்சியாக இந்த டிரைலர் வெளியீட்டை நடத்த முடிவு செய்தோம். அதற்காக நாங்கள் பல இயக்குனர்களை அணுகியபோது அனைவருமே எந்த மறுப்பும் சொல்லாமல் எங்களுக்கு அன்புடன் ஒத்துழைப்பு கொடுத்துள்ளனர்.

அது மட்டுமல்ல படத்தின் டிரைலரை பார்த்த பெரும்பாலான இயக்குநர்கள் இந்த படம் நடிகர் ஷாமுக்கு இரண்டாவது இன்னிங்ஸை துவக்கி வைக்கும் படமாக இருக்கும் என உறுதிபட கூறினார்கள்.

மேலும் நடிகர் ஷாமும் இந்த படம் உருவாகியுள்ள விதம் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார். வரும் பிப்ரவரி இறுதி வாரத்தில் இந்த படத்தை ரிலீஸ் செய்வதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. என்று கூறியுள்ளார். பார்க்கிங், மகாராஜா, கருடன் உள்ளிட்ட பல வெற்றிப் படங்களை வெளியிட்ட பைவ் ஸ்டார் நிறுவனம் 'அஸ்திரம்' படத்தை தமிழகமெங்கும் வெளியிட இருக்கிறது..

ஐரா, எட்டு தோட்டாக்கள், பொம்மை நாயகி ஆகிய படங்களுக்கு இசையமைத்த சுந்தரமூர்த்தி இந்த படத்திற்கு இசையமைத்திருக்கிறார். விரைவில் வெளியாக உள்ள ரேஞ்சர், ஜாக்சன் துரை 2 படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கல்யாண் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

இறுதிச்சுற்று, சூரரைப்போற்று படங்களில் துணை படத்தொகுப்பாளராக பணியாற்றிய பூபதி இந்த படத்தின் மூலம் படத்தொகுப்பாளராக அறிமுகம் ஆகிறார்.

கலை வடிவமைப்பை ராஜவேல், சண்டை பயிற்சியாளராக முகேஷ் பொறுப்பேற்றுள்ளார்கள்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் 04-02-2025 நிகழ்வுகள்

சென்னை 05, பிப்ரவரி 2025 : 1. நூறு நாள் வேலை ஊதியம் - தாமதம் ஏன்?

வடசென்னை திமுக எம்பி டாக்டர். கலாநிதி வீராசாமி கேள்வி

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் போதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துவதில் ஒன்றிய அரசு தவறுகிறது என வடசென்னை மக்களவை திமுக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி குற்றம்சாட்டியுள்ளார். அதேபோல் இத்திட்டத்தின்கீழ் மக்களுக்கு தாமதமாக ஊதியம் கிடைக்கப் பெறுவதையும் அவர் சுட்டியுள்ளார்.

மாநில மற்றும் உள்ளூர்மட்டங்களில் நிதிகளை நிர்வகிப்பதில் வெளிப்படைத் தன்மையும் பொறுப்புணர்வையும் அரசு உறுதி செய்ய வேண்டும், கிராமப்புற மக்களிடையே நூறு நாள் வேலை திட்டத்தின்கீழ் அவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் அவர் எழுப்பியுள்ளார்.

2. நாய்க்கடியால் பாதிக்கப்பட்ட 22 லட்சம் பேர்! தீர்வு என்ன?!

பெரம்பலூர் திமுக எம்பி. அருண் நேரு கேள்வி

கிராமப்புறப் பகுதிகள் மற்றும் நகரங்களில் நாய்கள், குரங்குகள் உள்ளிட்ட தெருவிலங்குகளினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாவதை குறிப்பிட்டும் உயிராபத்து ஏற்படுவதை தடுக்க வலியுறுத்தியும் பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அருண் நேரு இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதில் அவர் தெருவில் நாய்களினால் ஏற்படும் ஆபத்தை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் போதுமான நிதி இல்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

இதுவரை நாடு முழுவதும் காயமடைந்த குழந்தைகள் பற்றிய விவரங்களை அரசு வெளியிட வேண்டுமென கேட்டுக்கொண்ட அருண் நேரு, குழந்தைகள் பாதிக்கப்படுவதை தடுக்க உடனடியாக ஒன்றிய அரசு வலிமையான திட்டங்கள் வகுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழ்நாட்டு ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க கோரிக்கை

திருவண்ணாமலை திமுக எம்.பி. சி. என். அண்ணாதுரை காஞ்சிபுரம் திமுக எம்.பி. செல்வம்

பருத்தி, செயற்கை இழைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி செயல்திறன் குறித்து திருவண்ணாமலை மக்களவை உறுப்பினர் சி. என். அண்ணாதுரை மற்றும் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்திய ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு வகுதுள்ள கொள்கைகள் மற்றும் உத்திகள், கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு, தமிழ்நாட்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட ஜவுளித் தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகள் எத்தனை, ஏற்றுமதியை அதிகரிக்க அரசிடம் உள்ள நிதி உதவித்திட்டங்கள் போன்றவற்றின் விவரங்களை வெளியிடுமாறு அவர் தனது கேள்வியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

4. மீனவர்களுக்கு அரசு வீடுகள்

வேலூர் திமுக எம்.பி. கதிர் ஆனந்த் கோரிக்கை

தமிழ்நாட்டில் உள்ள மீனவர் சமூகத்தினருக்கு சுனாமி மற்றும் வெள்ளத் தடுப்பு வீடுகள் வழங்க ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்களின் விவரங்களை கேட்டு வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி யுள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் இத்திட்டங்களின்கீழ் பயனடைந்தவர்களின் விவரங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ஆகியவற்றையும் அவர் கோரியுள்ளார். மேலும் மீனவர் களுக்கு போதுமான வீட்டுவசதி, கல்வி, விளையாட்டு மற்றும் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை ஒன்றிய அரசு மேம்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.

# காவேரி மருத்துவமனை நடத்திய புற்றுநோய் விழிப்புணர்வு ஓட்டத்தில் 6,500 பேர் பங்கேற்றனர் ஆரம்பகால புற்றுநோய் கண்டறிதல் மற்றும் தடுப்பதை ஊக்குவிக்கும் முயற்சி




சென்னை 05, பிப்ரவரி 2025 : உலக புற்றுநோய் தினம் வரும் 4 ஆம் தேதி அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு சென்னையில் ஞாயிறன்று (பிப்.2) காவேரி மருத்துவமனை கே10கே என்ற பெயரில் நடத்திய புற்றுநோய் விழிப்புணர்வு ஓட்டத்தில் 6,500 பேர் உற்சாகமாக பங்கேற்றனர்.

சென்னை, பெசன்ட் நகரில் உள்ள ஆல்காட் நினைவு மேல்நிலைப் பள்ளியில், நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி புற்றுநோயால் பாதிக்கப்பட்வர்களுக்கான சமூக ஆதரவை தெரிவிக்கும் வகையில் நடத்தப்பட்டது. மேலும் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையிலும் நடத்தப்பட்டது.

இந்த ஓட்டமானது இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்டது. 10 கிமீ ஓட்டம் மற்றும் 5 கிமீ ஓட்டம், பிட்னஸ் ஆர்வலர்கள், தொழில்முறை விளையாட்டு வீரர்கள், குடும்பங்கள், மாணவர்கள் மற்றும் கார்ப்பரேட் தொழில் வல்லுநர்கள் உட்பட பலதரப்பட்ட நபர்கள் இதில் கலந்து கொண்டனர். இவர்களின் ஆர்வமான பங்கேற்பு புற்றுநோய் விழிப்புணர்வில் அதிகரித்து வரும் அக்கறையை பிரதிபலிக்கிறது. மற்றும் வழக்கமான பரிசோதனைகள் மற்றும் முன்கூட்டியே கண்டறிதல் ஆகியவற்றால் உயிரை பாதுகாக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

காவேரி மருத்துவமனை ஆழ்வார்பேட்டையில் உள்ள கதிரியக்க புற்றுநோயியல் இயக்குநர் டாக்டர் ஏ என் வைத்தீஸ்வரன், கூறுகையில் உலகளவில் அதிக இறப்புக்கு புற்றுநோயே முக்கிய காரணம் என்பதால் அந்நோயை முன்கூட்டியே கண்டறிவது அவசியம் என்றார். காவேரி கேன்சர் இன்ஸ்டிடியூட்டில் புற்றுநோய்க்கு விரிவான முன்னேறிய நவீன சிகிச்சை வசதிகள் உள்ளது என்றார். மேலும் ஆரம்பத்திலேயே அந்நோயை கண்டறிந்தால் விரைவாக குணப்படுத்த முடியும்.

பொது மக்களுக்கு புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு கல்வியை கற்பிப்பதும், வழக்கமான சோதனைகளுக்கு முன்னுரிமை அளிக்க அவர்களை ஊக்குவிப்பதும் இந்த ஓட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த முக்கியமான காரணத்தை ஆதரித்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் மருத்துவமனை சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அவர் கூறினார்.

காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ், புற்றுநோய் சிகிச்சையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் தடுப்பு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

"பல ஆண்டுகளாக, புற்றுநோய் பராமரிப்பு என்பது தனிப்பட்ட நபர்களுக்கு ஏற்றவகையிலும் இலக்குடன் கூடிய சிகிச்சைகள் வந்துள்ளன. புற்றுநோயைத் தடுப்பது மற்றும் முன்கூட்டியே கண்டறிதல் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதே எங்கள் முதன்மை நோக்கமாகும்.

மேலும் கே10கே ஓட்டத்தின் மூன்றாவது பதிப்பிற்கு சென்னை மக்களிடமிருந்து இதுபோன்ற நேர்மறையான பதிலைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஆதரவு தொடரும் என நம்புகிறோம்,

மேலும் இந்த நிகழ்வு அதிகமானோரை அவர்களின் அன்றாட வாழ்வில் உடற்பயிற்சியை ஒருங்கிணைக்க தூண்டுகிறது. இது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் முக்கியமானது. இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்த உறுதுணையாக இருந்த சென்னை போக்குவரத்து காவல்துறை மற்றும் பெருசென்னை மாநகராட்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

10 கிமீ ஓட்டத்தில் பல்வேறு வயதுப் பிரிவினர் கலந்து கொண்டனர். அனைத்து நிலைகளிலும் உடற்தகுதியுடையவர்கள் ஓட்டத்தில் பங்கேற்க அழைக்கப்பட்டனர். ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பிரிவுகளில் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

# புனீத் ராஜ்குமாருக்கு அர்ப்பணிக்கும் விதமாக உருவாகும் படம் ட்யூட்...

சென்னை 05, பிப்ரவரி 2025 : பனோரமிக் ஸ்டுடியோஸ் சார்பில் தமிழ், கன்னடம், தெலுங்கு படமாக உருவாகியுள்ளது 'ட்யூட்' இயக்குனர் தேஜ் இந்த படத்தை இயக்கியுள்ளதுடன் கதாநாயகனாகவும் நடித்திருக்கிறார்.

தமிழில் 'கொஞ்சம் வெயில் கொஞ்சம் மழை', 'காதலுக்கு மரணமில்லை', கன்னடத்தில் 'ரீவைண்ட்', மற்றும் 'ராமாச்சாரி 2.ஓ' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார் தேஜ். இவரது அடுத்த படமாக 'ட்யூட்' உருவாகியுள்ளது.

மேலும் இந்தப் படத்தில் ராகவேந்திரா ராஜ்குமார், சான்யா காவேரம்மா, மேகா, மோகினி, திரீத்தி, அனர்க்யா, தீபாலி பாண்டே, ஸ்ரீ, இவாஞ்சலின், சோனு தீர்த் கவுடா, யஷாஸ்வினி, மெர்ஸி, மோனிஷா, ராஜேஸ்வரி, சுந்தர்ராஜ், ஸ்பர்ஷா ரேகா மற்றும் விஜய் செந்தூர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்திற்கு பிரேம் ஒளிப்பதிவு செய்துள்ளார். எமில் முகமது இசையமைத் துள்ளார்.

தற்போது இந்த படத்தில் இருந்து "எமிட்டோ மாயா மந்த்ரமாயே.. மதிஜிங்கலா பரிகெத்தேனே" என்கிற ஃபர்ஸ்ட் சிங்கிள் கன்னடம்,



தெலுங்கு என இரு மொழிகளிலும் வெளியாகி, சோசியல் மீடியாவில் வைரலாகி, ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது.

இந்தப் பாடலின் தெலுங்கு வெர்ஷனை எஸ்பி மனோகர் எழுத, அதை அபிஷேக் பாடியுள்ளார்.

கால்பந்து விளையாட்டு பின்னணியில் ஒரு ஸ்போர்ட்ஸ் டிராமாவாக 'ட்யூட்' உருவாகி வருகிறது. குறிப்பாக கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவரான மறைந்த கன்னட சூப்பர் ஸ்டார் புனீத் ராஜ்குமாருக்கு அர்ப்பணிக்கும் விதமாக இந்த படம் தயாராகி வருகிறது..

இந்தப் படத்தின் 50 சதவீத படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது. இன்னொரு பக்கம் இதன் போஸ்ட் புரொடக்ஷன் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஜூன் அல்லது ஜூலையில் படம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# கார்த்திக் ஆர்யனின் ஸ்பார்க்குடன் ஆசைகளை முன்னிலைப்படுத்தும் ‘ஃபேன்டா மங்டா’

சென்னை, 05 பிப்ரவரி 2025: கோகோ கோலா இந்தியாவின் சுவையான பான பிராண்டான ஃபேன்டா, அதன் வசீகரமான பிராண்ட் தூதர் கார்த்திக் ஆர்யனை உள்ளடக்கிய ‘ஃபேன்டா மங்டா’ என்ற புதிய விளம்பரப் பிரச்சாரத்துடன் மீண்டும் வந்துள்ளது. இந்த பிரச்சாரம் ஜென் ஜீ’கள் அவர்கள் விரும்புவதைப் பின்தொடர்வதைக் கொண்டாடுகிறது - ஏனென்றால் இவ்வளவு சுவையான ஒன்றை நீங்கள் எதிர்பார்க்கும்போது வேறு எதுவும் அதை ஈடேற்றாது.




பல தசாப்தங்களாக, ஃபேன்டா வெறும் பானம் என்பதை விட மேம்பட்டதாகும். பிரகாசமான, வேடிக்கையான, சுவையுடன் கூடிய, தயக்கமின்றி மகிழ்ச்சியைத் தழுவுபவர்களுக்காக இது எப்போதும் சரியான தேர்வாக இருந்து வருகிறது. இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் மூலம், இந்த பிராண்ட் ஏக்கங்களின் சிலிர்ப்பில் ஆழமாக மூழ்கி, அனைவரையும் தங்கள் ஏக்கங்களுக்கு எதுவும் தடையாக இல்லாமல் இருப்பதை ஊக்குவிக்கிறது. அவை அனைத்திலும் மிகப்பெரிய ஏக்கம் - ஃபேன்டா.

“அவுர் குச் நகி மங்டா, ஷர்ஃப் ஃபேன்டா மங்டா” என்ற கருத்தை உயிர்ப்பிக்கும் இந்த விளம்பரப் பிரச்சாரப் படம், மகிழ்ச்சியின் மீது ஸ்கிரிப்டைக் கொண்டுள்ளது - இதற்கான ஒரே பதில் ஃபேன்டாவின் நாவூறச்செய்யும் சுவையான தன்மை மட்டுமே. தனது தனித்துவமான தன்னிச்சையான தன்மை மற்றும் வசீகரத்துடன், கார்த்திக் ஆர்யன் ஃபேன்டாவின் இறுதித் துணையை உருவாக்குகிறார் - ஒவ்வொரு மனநிலைக்கும், தருணத்திற்கும், உந்துதலுக்கும் ஏற்றதாக அது உள்ளது.

கோகோ கோலா இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியாவின் ஸ்பார்க்ளிங் ஃப்ளேவர்ஸ் பிரிவின் மூத்த வகையின இயக்குநர் சுமேலி சாட்டர்ஜி அவர்கள், “இளைஞர்களின் ’ாழ்க்கை மிகவும் பரபரப்பாக இருக்கும், ஆனால் அவர்கள் எப்போதும் தங்கள் அன்றாட ஆசைகளை கவனித்துக் கொள்ள நேரத்தை உருவாக்குவார்கள். ஃபேன்டாவின் நாவூறச்செய்யும் சுவையானது அனைத்து ஆசைகளுக்கும் ஒரு சரியான தீர்வாகும். புதிய பிரச்சாரமான ஃபான்டா மங்டா, டீனேஜர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்ற சிறிது நேரம் ஒதுக்க ஊக்குவிக்கும் ஒரு வேடிக்கையான மற்றும் விளையாட்டுத்தனமான திருப்பமாகும். கார்த்திக் ஆர்யனின் கவர்ச்சி மற்றும் மறுகற்பனை செய்யப்பட்ட 1980களின் இசையுடன், இந்த விளம்பரப் பிரச்சாரம் ஏக்கப் போக்கில் வாழ்கிறது, ஏக்கத்தை நவீன விளக்கத்தின் தொடுதலுடன் கலக்கிறது” என்று பகிர்ந்து கொண்டார்.

இன்ஷ்வா யின் க்ஷிடூடியோ எக்ஸ் கிரியேட்டிவ் தலைவர் மற்றும் விஎம்எல் இந்தியாவின் யூலைமை படைப்பாற்றல் அலுவலர், முகுந்த் ஒலெட்டி அவர்கள் “நீங்கள் சுவையான ஒன்றை நினைத்து ஏங்கும்போது, எவ்வளவு பணம், தங்கம் அல்லது புகழும் உங்களைத் திருப்திப்படுத்த முடியாது. உங்களுக்கு ஒரு ஃபேன்டா தேவை. இந்த எண்ணத்தை உயிர்ப்பிக்க, எங்களிடம் வித்தியாசமான கதைக்களமும், அதையெல்லாம் ஒன்றாக இணைக்கும் ஒரு மறக்கமுடியாத பாடலும் உள்ளது. னுன்னால் ஹம்மிங்கை நிறுத்த முடியவில்லை!” என்று கூறினார்.

“ஃபேன்டா மங்டா விளம்பரப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இருப்பது ஒரு வேடிக்கையான அனுபவமாக இருந்தது! ஃபேன்டா ஒவ்வொரு தருணத்தையும் துடிப்பானதாகவும், உற்சாகமாகவும் மாற்றுகிறது. ஒரு நொடி கூட யோசிக்காமல் வாழ்க்கையை அனுபவிப்பதையும், விரும்புவதை ஏற்றுக்கொள்வதையும் சாத்தியமாக்கிறது” என்று விளம்பரப் பிரச்சாரத்தின் முகமான கார்த்திக் ஆர்யன் கூறினார்.

இந்த 360 டிகிரி பிரச்சாரம் தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் டச்பாயிண்டுகள் முழுவதும் விரிவுபடுத்தப்படும், இது மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பற்றிய புதிய பார்வையை வழங்கும்.

# ஜெ.ஜெ. நகர் பகுதியில் மகளுடன் சென்ற தாயாரிடம் தகராறு செய்து கையை பிடித்து இழுத்த நபர் கைது.

சென்னை, 05 பிப்ரவரி 2025: சென்னை, அண்ணா நகர் பகுதியில் வசித்து வரும் 15 வயது பள்ளி மாணவி தினந்தோறும் சைக்கிளில் பள்ளிக்கு செல்லும்போது, ஒரு நபர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வருவதாக மாணவி கூறியதால், மாணவியும் அவரது தாயாரும் 03.02.2025 அன்று காலை பள்ளிக்கு செல்லும் வழியில், அரசர் தெருவில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மாணவியின் செல்போன் எண்ணை கேட்டதாகவும், தாயார்



யார் நீ என்று அந்த நபரை கேட்டபோது, அந்த நபர் மாணவியின் தாயாரை தகாத வார்த்தைகளால் பேசி அவரது கையை பிடித்து இழுத்து தகராறு செய்தபோது, பொதுமக்கள் வருவதை கண்டு அந்த நபர் தப்பிச் சென்றதாகவும், மாணவியின் தாயார் வி-3 ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (திஎன்பிஎச்டபிள்யு ஆக்ட்) ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

வி-3 ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பிரேம்நாத், வ/37, த/பெ.சங்கர், வெங்கடேச பெருமாள் கோவில் 4வது குறுக்குத் தெரு, மண்ணூர் பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட பிரேம்நாத் விசாரணைக்குப் பின்னர் 03.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற

# சென்னை வந்த விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, 05 பிப்ரவரி 2025: சென்னைக்கு வந்த விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

விமான நிலையம், கல்வி நிலையங்கள் உள்பட பல பகுதிகளில் கடந்த சில மாதங்களாக வெடிகுண்டு மிரட்டல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சென்னை விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக தகவல் வெளியானதை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு 237 பயணிகளுடன் வந்து கொண்டிருந்த சர்வதேச விமானம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து விமானம் பத்திரமாக சென்னை விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த பயணிகள் பத்திரமாக இறக்கி விடப்பட்டனர். அவர்களின் உடைமைகளை சோதனை நடத்திய பின்னர் விமானத்தில் பலத்த சோதனை நடத்தப்பட்டது. இச்சோதனையில் எதுவும் சிக்காததால் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்தது.

இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை பிடிக்க விசாரணை நடத்தி வருகின்றனர். வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட விமானம் குறித்த கூடுதல் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

# டிசிஎஸ், பிராண்ட் மதிப்பில் $20 பில்லியனைக் கடந்திருக்கும் 2-வது உலகளாவிய தகவல் தொழில்நுட்ப சேவைகள் ப்ராண்ட் என்ற மாபெரும் மைல்கல்லை எட்டியிருக்கிறது!

சென்னை, 05 பிப்ரவரி 2025: புதுமையான கண்டுபிடிப்புகளை முன்னெடுக்கும் வலுவான கலாச்சாரம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முதலீடு மற்றும் அடுத்த தலைமுறை திறன் மேம்பாடு போன்ற அம்சங்களை நாளுக்கு நாள் விரிவடையும் உலகளாவிய செயல்பாடுகள், உத்திரீதியிலான தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமைத்துவத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருவதன் பலனாக ப்ராண்ட் ஃபைனான்ஸ் ஐடி சர்வீசஸ் 2025 தரவரிசைப் பட்டியலில் டிசிஎஸ் தனக்கென ஒரு உறுதியான இடத்தைப் பிடித்திருக்கிறது.




தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனைகள் மற்றும் வணிக தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ப்ராண்ட் மதிப்பு $21.3 பில்லியன் ஆக உள்ள இரண்டாவது உலகளாவிய தகவல் தொழில்நுட்ப சேவை ப்ராண்ட் என்ற மாபெரும் மைல்கல் சாதனையைப் படைத்திருக்கிறது. 2010-ம் ஆண்டில் $2.3 பில்லியனில் இருந்த ப்ராண்ட் மதிப்பு, கடந்த 15 ஆண்டுகளில் 826% வளர்ச்சியைப் பெற்று, ஐடி சர்வீசஸ் துறையில் பிரதான இடத்துடனான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது டிசிஎஸ். புதுமையான கண்டுபிடிப்புகள், திருப்தியளிக்கும் வகையிலான வாடிக்கையாளர் சேவைகள், உத்தி அடிப்படையில் சந்தைப்படுத்தும் முயற்சிகள் ஆகியவற்றில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பெரும் முதலீடுகளால் இந்த சாதனை டிசிஎஸ்-ஸூக்கு சாத்தியமாகி இருக்கிறது.

பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் தலைவர் திரு. டேவிட் ஹெய்க் [சிஇஓ & சேர்மன், பிராண்ட் ஃபைனான்ஸ்] கூறுகையில், “பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக டிசிஎஸ் நிறுவனத்தை கூர்ந்து கண்காணித்து வருகிறோம். டிசிஎஸ் நிறுவனம் தனது வணிகத்தை எப்படியெல்லாம் புதுமைப்படுத்துகிறது என்பதையும், தங்களது ப்ராண்டை உலக அரங்கில் எவ்வாறு முன்னிறுத்துகிறது என்பதையும் பார்க்கையில் நான் டிசிஎஸ் நிறுவனத்தினால் தொடர்ந்து ஈர்க்கப்பட்டிருக்கிறேன். அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகள்தான், தகவல் தொழில்நுட்ப சேவைகள் துறையில் 20 பில்லியன் மதிப்பைத் தாண்டிய ப்ராண்ட் மதிப்புள்ள இரண்டாவது நிறுவனமாக அவர்களை இப்படியொரு மாபெரும் மைல்கல் ஆண்டிற்கு முன்னெடுத்து சென்றிருக்கின்றன. இப்படியொரு ப்ராண்டை பெருமையுடன் முன்னெடுத்து செல்லும் 600 ஆயிரம் டிசிஎஸ் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்’’ என்றார்.

மிகவும் சிக்கலான சவால்களை எதிர்கொள்ளும் மேம்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கி வருவதன் மூலம், உலகளாவிய பெருநிறுவனங்களுக்கு ஒரு நம்பகமான பங்குதார நிறுவனமாக டிசிஎஸ் தன்னைத் தொடர்ந்து நிரூபித்து வருகிறது.

புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கம் போன்றவற்றில் டிசிஎஸ் காட்டின் வரும் அர்ப்பணிப்பானது, செயற்கை நுண்ணறிவில் (ஏஐ) அந்நிறுவனம் கொண்டிருக்கும் தலைமைத்துவமிக்க திறனால் மேலும் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. டிசிஎஸ் வழங்கி வரும் செயற்கை நுண்ணறிவு மூலமான தீர்வுகள் செயல்பாடுகளை மேம்படுத்துவதோடு மட்டுமில்லாமல் வாடிக்கையாளர் அனுபவங்களை சிறப்பானதாக மாற்றுகிறது.

மேலும் சரியான நெறி முறைகளுக்கும், நீண்ட கால தாக்கத்தை உருவாக்குவதற்கும் முன்னுரிமை அளிப்பதை உறுதி செய்கிறது. புதுமைகளை வழங்குவது ஒருபக்கமிருப்பினும், வாடிக்கையாளர்களுக்கு இருக்கும் மனதிருப்தியும் டிசிஎஸ்-ன் வெற்றிக்கு அடிப்படையாக இருந்து வருகிறது. 2024-ம் ஆண்டில், வைட்லேன் ரிசர்ச் மேற்கொண்ட ஆய்வில், ஐரோப்பாவில் வாடிக்கையாளர் திருப்திக்கான #1 ஐடி சர்வீசஸ் நிறுவனமாக டிசிஎஸ் தரவரிசைப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது டிசிஎஸ் எப்பொழுதும் வாடிக்கையாளர்களை மையமாக கொண்டு செயல்பட்டு வருவதை பிரதிபலிக்கும் வகையிலும், அபாரமான செயல்திறனுக்கு ஒரு அங்கீகாரமாகவும் அமைந்திருக்கிறது.

டிசிஎஸ் தனது வாடிக்கையாளர்களுக்கு காட்டிவரும் அர்ப்பணிப்பானது, நீடித்து நிலைக்கத்தக்க சுற்றுச்சூழலைப் பேணிகாப்பதிலும் அதே முக்கியத்துவத்துடன் பின்பற்றப்படுகிறது. தங்களது அலுவலகங்கள் மற்றும் வணிக வளாகங்கள் செயல்பட்டு இடங்களில் கார்பன் உமிழ்வைக் குறைக்க டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இருந்து, ஹைட்ரஜனில் இயங்கும் உலகின் முதல் விமான இயந்திரத்தை உருவாக்க ரோல்ஸ் ராய்ஸுடன் இணைந்து செயல்படுவதில் வரை டிசிஎஸ் சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையில் புதுமைகளை உருவாக்குகிறது.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி திரு. அபினவ் குமார் [சீஃப் மார்க்கெட்டிங் ஆஃபீசர், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்] கூறுகையில், “டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்துடன் [வேர்ல்டு எக்னாமிக் ஃபோரம்] 2025-ம் புதிய ஆண்டைத் தொடங்கும் போது, எங்கள் ப்ராண்ட் ஒரு மாபெரும் மைல்கல் சாதனையைக் கடந்திருப்பதோடு, இத்துறையில் எங்களது நிபுணத்துவமிக்க பிரதான இடத்தை மேலும் உறுதிப்படுத்தி இருக்கிறது. நாங்கள் 15 ஆண்டுகளாக உலகப் பொருளாதார மன்றத்திற்கு ஒரு உத்திரீதியிலான பங்குதாரராக இருந்து வருகிறோம், இந்த காலகட்டத்தில் எங்கள் ப்ராண்ட் மதிப்பு ஏறக்குறைய ஒன்பது மடங்காக வளர்ச்சிக்கண்டுள்ளது. மேலும் புதுமையான தயாரிப்புகளை வழங்குவதில் முன்னோடியாகவும், மிகவும் சிக்கலான தொழில்நுட்ப வேலைகளை உலகிற்கு வழங்கும் திறனுள்ள நிறுவனமாகவும், வாடிக்கையாளர்களுடன் மதிப்புமிக்க நீண்ட கால கூட்டு செயல்பாடுகளை பெற்றிருக்கும் நிறுவனமாகவும் நாங்கள் உலகறியப் பட்டிருக்கிறோம். ஒவ்வொரு நொடியும் இந்த சிறந்த ப்ராண்டை பெருமைமிக்கதாக உருவாக்கி, அதனுடனேயே வாழ்ந்து வரும் நூறுக்கணக்கான ஆயிரக்கணக்கான டிசிஎஸ் பணியாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. நாம் அனைவரும் அதன் நீண்ட கால செயல்பாட்டில் ஒன்றிணைந்திருக்கிறோம்’’ என்றார்.

சந்தைப்படுத்தலில் டிசிஎஸ் காட்டிவரும் அக்கறை, ப்ராண்ட்டை அனைத்து தொழில் துறைகளிலும் பரீட்ச்சயமானதாக மாற்றியிருப்பதோடு, சர்வதேச அளவில் சென்றடைய வைத்திருக்கிறது. உலகம் முழுவதிலுமாக 14 முக்கிய ஓட்டப் பந்தயங்களுக்கு டிசிஎஸ் நிதியுதவி அளித்து வருகிறது. இதில் நியூயார்க், லண்டன், பாஸ்டன், சிகாகோ மற்றும் சிட்னி என உலகளவில் மிக கௌரவமான 5 அப்பாட் வேர்ல்ட் மாரத்தான் யோட்டிகளும் இதில் அடங்கும். வருடத்திற்கு இப்போட்டிகளில் மட்டும் 600,000-க்கும் மேலானவர்கள் பங்குப்பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஃப்யூச்சர் அத்லெட் ப்ராஜக்ட் போன்ற முன்முயற்சியின் மூலம், டிசிஎஸ் மேம்பட்ட டிஜிட்டல் ட்வின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இதய செயல்பாட்டைக் கண்காணிக்கவும், விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்தவும், ஆரோக்கியம், உடல்நலத்தில் அக்கறை கொள்வதை வலியுறுத்தவும், சமூக மேம்பாட்டுக்கான முயற்சிகளை முன்னெடுக்கவும் தான் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.